**19.10.2023**

**அ.வ.எண். 20/2022**

**<u>வா.சா.1 துரை அவர்களின் 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்க்கு சொத்து உரிமையானது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.5. அதன் உட்பிரிவு எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் ஜக்குபந்தி எனக்கு தெரியாது. தாவா சொத்தினை நான் அனுபவித்து இருந்தால் அதன் உட்பிரிவு மற்றும் ஜக்குபந்தி எனக்கு தெரிந்து இருக்கும் என்றாலும் நான் தாவா சொத்தினை அனுபவிக்காததால் தான் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

2. கண்ணம்மாள் என்பவர் வீங்க கவுண்டரின் வாரிசு என்று எனது பிராதுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நானும் மற்ற வாதிகளும் கோவிந்தசாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து குப்புசாமியின் பாகம் என்றால் இல்லை.

3. குப்புசாமியின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. குப்புசாமியின் இறப்பு சான்றிதழை தாக்கல் அவர் எப்போது இறந்தார் என்ற விவரமும் அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற விவரமும் தெரியவரும் என்பதால் தான் வேண்டுமென்றே குப்புசாமியின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. குப்புசாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வீங்க கவுண்டரின் வாரிசான செல்லப்பா உயிருடன் இருக்கிறா இல்லையா என்ற விவரத்தினை வழக்கில் சொல்லவில்லை என்றாலும் அவர் இறந்திருந்தால் அவரது வாரிசுகளை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான்.

5. வீங்க கவண்டரின் வாரிசுகள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்க்காததால் உரிய தரப்பினர்களை சேர்க்காத தோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதனடிப்படையிலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. ஆள்மாறாட்டம் செய்து விற்பனை செய்ததற்காக புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரின் நகல், சி எஸ் ஆர்

அல்லது முதல் தகவல் அறிக்கை ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

6. தாவா சொத்து இல்லாமல் தாவா கிராமத்தில் எனக்கு சொந்தமாக 4 ஏக்கர் நிலம் உள்ளது. அதை எனது மகன் பெயரில் மாற்றியுள்ளேன். மேற்படி 4 ஏக்கர் நிலம் நான் சுயமாக சம்பாதித்தது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

7. சார்பதிவாளர் அலுவலத்தில் நான் கொடுத்ததாக சொல்லும் மனுவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகள் குப்புசாமியின் பொது அதிகார முகவர் மூலமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் தாவா சொத்தினை கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட நாளில் குப்புசாமி உயிருடன் இருந்தார் என்பதற்கு அரசு மருத்துவர் வழங்கிய சான்றிதழையும் பத்திரத்துடன் இணைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் வீங்க கவுண்டரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யாததாலும் அவரது இறப்பு சான்றிதழ் உண்மையான ஆவணம் இல்லை என்பதாலும் நான் வீங்க

கவுண்டரின் வாரிசு என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததாலும் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**9**. வீங்க கவுண்டர் இறந்த பிறகு தாவா சொத்தினை அவரது வாரிசு என்ற முறையில் நான் அனுபவித்து வந்தேன் என்று காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1க்கும் வழக்கிற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**10**. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணமும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதால் 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு செலவு தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.